This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# மெரினா

www.writersujatha.com

## 1

திலீப் சாயங்கால வேளைகளில் மெரீனாவுக்குப் போகமாட்டான். ராத்திரிதான். அவன் பாஷையில் குடுமிகளும் கொள்ட்டிகளும் குஜ்ஜுக்களும் கெத்தான ஆசாமிகளும் பாப்கார்ன் சாப்பிட்டுப் பலூன் பிடிக்கும். பட்டம் விடும் வேளை சாயங்காலம். மெரீனா வேளா வேளை வேஷம் மாறும்.

சோடியம் மஞ்சளில் நனைந்த கடற்கரையில் சேட்டுகள் லேட்டாக உலா வருவார்கள். மனைவியர் அலுமினிய நாற்காலிகளில் வீற்றிருக்க, நாய்கள் உற்சாகமாக் கடல் அலைகளுக்கேற்ப குதித்து நண்டு பிடிக்கும். வீட்டுக்குப்பயந்த காதலர்கள் இருள் விளிம்பில் முழந்தாளிட்டு உலகை விலை பேசிவிட்டு 5ஆம் நம்பர் பஸ் பிடித்துச் செல்வார்கள். தைரியமுள்ள காதலர்கள் சட்டை ரவிக்கை தளர்த்தி சற்று நேரம் மெய்மறப்பார்கள். (அது மட்டும் வேண்டாம் சேகர், ப்ளீஸ்)

எட்டரை மனிக்கு மெரீனா மோனத் தவத்தில் ஆழும்போது வலை நாற்றத்தின் பின்னணியில் அங்கங்கே ஒரு இரவுப் பறவை குரல் கொடுத்து மீன் பிடிக்க குத்துமதிப்பாக அலைகளைக் கொத்தும்போது தூரத்துக்கப்பல் குப்பல்கள் விளக்குப் போட்டுக்கொண்டு வேடிக்கை பார்க்க்கும். கூர்ந்து பார்த்தால் டால்பின் துள்ளல்கூடத்தெரியும்.

திலீப் அந்தச்சமயத்தில்தான் தன் நண்பர்களுடன் மெரீனாவுக்கு ஒரு சிற்றரசனின் திக்விஜயம் போலப்போவான்.

அனாவசிய – அலங்கார மோட்டார் சைக்கிள்கள் பின் தொடர கையில்லாப் பனியனும் தோல் உரை மணிக்கட்டும் சைக்கடெலிக் கண்ணாடியும் முதுகுப்பையுமாக, காற்றில் சிகரெட் ஆட 'பட்வைஸர்' 'ஹைனக்கென்' போன்ற அயல் நாட்டுப்பெயர் கொண்ட பியர் குவளைகளைக்கட்டை விரலால் சீல் திறந்து குலுக்கி நுரைக்கக் குடித்துவிட்டு ஜென் காரை கடற்கரையை ஒட்டிய தார் சாலையில் நிறுத்திவிட்டுக் கடைசி கடைகள் பெட்ரமாக்ஸை அணைப்பதற்கு முன் சோளக்கொண்டை வாங்கிக் கொண்டு அலை நோக்கி ஓடுவார்கள்.

அலைஃரம் முடிந்த உடனே இருக்கும் மணல் சரிவில் உட்கார்ந்து கொண்டு புகைப்பார்கள். கொக்கேய்ன் சேர்மானங்களை உள்ளங்கையில் வைத்து மூக்கால் உறிஞ்சும்போது பியருடன் ஒத்துழைத்து மயக்கம் தலைக்கேறும்.

சப்பான் தேசத்துப் பத்தாயிரம் வாட் பெட்டியில் 'எர்த் விண்ட் அண்ட் ஃபயர்' கேட்பார்கள். நரசிம்மன் டார்ச் வெளிச்சத்தில் 'ஆடன்' படிப்பான். நடராசன் ஈழத்துக் கவிதைகளை மனனம் செய்வான். பில்கேட்ஸ்' என்ற புனைப்பெயர் கொண்ட விஜயன் பேஸ்பால் தொப்பியைத் தலையில் திருப்பி அணிந்து கொண்டு (cyber) கனவுகளில் ஆழ்வான்.